சுருக்கம்

பொது நூலகத் துறை — சென்னையில் சர்வதேச தரத்திலான நவீன மாநில நூலகம் அமைத்தல் — ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (கே2) துறை

அரசாணை (நிலை) எண்.195 நாள். 6.8.07

படிக்கப்பட்டவை

கன்னிமாரா பொது நூலக இயக்குநர் கடித ந.க.எண். 3658/அ5/2006 நாள் 5.6.07.

------

ஆணை

2007-08ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் வரவு செலவு திட்ட அறிக்கையில் நூலகங்கள் தொடர்பாக கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

”தற்கால அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்றுப் பின்னணி கொண்ட பனுவல்கள் மற்றும் மேற்கோள் தொகுப்புகள் போன்றவை சாதாரண மக்களுக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எட்டாக் கனியாக இருக்கும் நிலையை மாற்றிட, இவை அனைத்தும் அவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில் சென்னையில் சர்வதேச தரத்திலான நவீன மாநில நூலகம் ஒன்றை இந்த அரசு அமைக்கும். அனைத்து நூல்கள் மற்றும் இணைய வெளியீடுகளோடு, நவீனக் கட்டமைப்பு வசதிகள் கொண்ட மாபெரும் மாதிரி நூலகமாக இது அமையப்பெறும்.”

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், நவீன மாநில நூலகம் கட்டுவது தொடர்பான பணிகளை மேற்கொள்ள உரிய ஆணை வழங்குமாறு கன்னிமாரா பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. கன்னிமாரா பொதுநூலக இயக்குநரின் கருத்துருவினை ஏற்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி சென்னையில் சர்வதேச தரத்திலான நவீன மாநில நூலகம் அமைக்க அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், நூலகக் கட்டடம் கட்டுவதற்கான மொத்தச் செலவில் 80 விழுக்காடு செலவினை நூலக ஆணைக்குழுவும் 20 விழுக்காடு செலவை தமிழக அரசும் மேற்கொள்ளவும், அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்
அரசு செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர்,
சென்னை – 2.
இயக்குநர்,
கன்னிமாரா பொது நூலகம்,
சென்னை – 8.
<u>நகல்</u>
நிதித்துறை,
சென்னை - 3.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.